JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 14 | இதழ் 11 | ஜனவரி 2024 |
ஆண்டு சந்தா ₹ 100



சாத்தான் எத்தனை விதமான
அக்கினியாஸ்திரங்களை
எய்தாலும் நம் தேவன் எல்லா

## தீங்குக்கு விலக்குவார்!



**வாலிபர் உலகம் பத்திரிக்கையின் அனைத்து வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும் இயேசு விடுவிக்கிறார் குடும்பத்தின் சார்பாக எங்களது புது வருட நல்வாழ்த்துக்கள்!**

WELCOME
2024
HAPPY
New Year

## உள்ளே...






வாலிபர் உலகம்

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாக ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். **மேலும் தொடர்புக்கு 9750955547**

JESUS REDEEMS MINISTRIES


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

*ஆசிரியர்:* **மோகன் சி. லாசரஸ்** *இணை ஆசிரியர்:* **அவினாஷ்**

*ஆசிரியர் குழு:* **வயலா | ஜெயசீலன் | ரவி | ரேச்சல் | கிளாடிஸ் | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜாண்**

*வடிவமைப்பு:* **'இயேசு விடுவிக்கிறார்' வடிவமைப்பு குழுவினர்**

# தலைவாசல்




**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!**

அக்டோபர் மாதம் 7ம் தேதியை இஸ்ரேல் தேசத்தால் மறக்க முடியாதபடி, Hamas தீவிரவாதிகள் 5000 குண்டு மழைகளை 20 நிமிடத்தில் பொழிந்து தள்ளி இஸ்ரேல் நாட்டை நிலை குலையச் செய்தார்கள். எந்த முறையும் இல்லாத அளவுக்கு **'வான் வழி தாக்குதல், தரை வழி தாக்குதல்'**, **'கடல் வழி தாக்குதல் என்று பல வகையில் தாக்குதல் நடத்தி'**, இஸ்ரேல் நாட்டில் ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்தி 248க்கும் மேற்பட்டவர்களை பிணைக்கைதிகளாக கொண்டு போய் விட்டனர். 1377க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். பல ஆயிரங்கள் காயப்பட்டனர், சில ராணுவ வீரர்கள் மரித்தனர். Iron dome என்ற பாதுகாப்பு கவசம் இஸ்ரேல் தேசத்தை சுற்றி இருந்ததால், 5000 Missileகள் ஒரே நேரத்தில் தாக்கியபோதும், சில சேதங்கள் மட்டுமே ஏற்பட்டன. மட்டுமல்ல, இஸ்ரேல் தேசத்தின் பலம் வாய்ந்தது ராணுவமும் முக்கிய காரணம் என்று சொல்லலாம். பெரிய சேதத்தை ஏற்படுத்தி இஸ்ரேல் நாட்டையே முடக்கி விடலாம் என்று Hamas திட்டம் போட்டாலும் ஒரே நாளில் எழுந்து மறு தாக்குதல் ஆரம்பித்தது இஸ்ரேல் ராணுவம். காசா எல்லையில் ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்தினார்கள். பாலஸ்தீனத்திற்கு உதவியாக சிரியா மற்றும் லெபனான் உதவிக்கு வந்து இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஆனால் இஸ்ரேல் ஒரு சிறிய நாடாக இருந்தாலும், தன்னை சுற்றி இருக்கும் அத்தனை எதிரி நாடுகளுக்கும் சவால் விட்டது.









Hamasன் முழு குழுவையும் அழிக்கும் வரை ஓயமாட்டோம் என்று இஸ்ரேல் ராணுவம் முடிவெடுத்து, அதில் இன்று வரை நிலைத்தும் நிற்கிறது. எத்தனை ஏவுகணைகளை இஸ்ரேல் நாட்டின் மீது வீசினாலும் யாராலும் இஸ்ரேல் தேசத்தை வீழ்த்தவும் முடியவில்லை, ஜெயிக்கவும் முடியவில்லை. காரணம், Israelன் Iron dome யை காட்டிலும், கர்த்தருடைய கரமும், வல்லமையும் அந்த தேசத்திற்கு இன்னும் பலமாய், அரணாய் இருப்பதால்தான்.

**எனக்கன்பான வாலிபர்களே! சாத்தான் உங்களை வீழ்த்தி, சேதத்தை உண்டாக்க பாவம், சோர்வு, தோல்வி போன்ற எத்தனை அக்கினியாஸ்திரங்களை எய்தாலும், Iron Domeஐ விட பாதுகாப்பான தேவ பிரசன்னம் உங்களைப் பாதுகாக்கும். 2023ஆம் ஆண்டு முழுவதும், தீங்கு அணுகாமல் பாதுகாத்ததைப் போல இந்த ஆண்டும் கர்த்தர் உங்களை எல்லா தீங்குக்கும் விலக்கிக் காப்பார். மேலும் விலையேறப் பெற்ற உங்கள் ஆத்துமாவையும் காப்பதாக வாக்குக் கொடுக்கிறார்.**

இன்றைக்கு பிசாசானவன் எல்லா பக்கங்களிலும் உங்களை சூழ பாளயம் இறங்கி தாக்க ஆரம்பித்தாலும், கர்த்தரின் பாதுகாப்பு உங்களுக்கு நிச்சயம் உண்டு! ''நான் உன் ஆத்துமாவை காப்பேன்'' என்று கர்த்தர் வாக்குக் கொடுக்கிறார். எனவே எழுப்புதல் பணியை நிறைவேற்ற உங்கள் பகுதியில் புதிய ஆண்டில் புதிய பெலனோடு செயல்படுங்கள்! தேவன் அரணாய், பெரிய பாதுகாப்பாய் உங்களோடு இருந்து, எல்லா தீங்கிற்கும் விலக்கிக் காப்பார்!



கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்



# அழைப்பு இருந்ததால்; அழிந்து போகவில்லை!




**ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்து, 9 வயதிலேயே இசையின் மீதுள்ள ஆர்வத்தினால் இயேசுவை ஏற்றுக்கொண்டு, 10 வயதில் அபிஷேகம் பண்ணப்பட்டு, முழுநேர அழைப்பைப்பெற்று இன்றைக்கு அருமையான பாடல்கள் மூலமாக அநேக வாலிபர்களை தேவன் பக்கமாக திருப்பிக்கொண்டிருக்கும் இளம் போதகர், ஆராதனை வீரர் சகோ. ரஞ்சித் ஜெபா அவர்களை தேவன் எப்படி தெரிந்துகொண்டார் என்பதை இந்த நேர்காணலின் வாயிலாக அவரே நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்கள்...**

**பில்லி:** ஹலோ அண்ணே... எப்படி இருக்கீங்க?

**ரஞ்சித் ஜெபா:** தேவனுடைய கிருபையினால் நான் நன்றாக இருக்கிறேன்.

**பில்லி:** எங்கள் வாலிபர் உலகம் வாசகர்களுக்கு உங்களை அறிமுகப்படுத்துவதில் பெரும் மகிழ்ச்சி...

**ரஞ்சித்:** நன்றி! எனக்கும் உங்களோடு என் சாட்சியை பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி.

**பில்லி:** சரி அண்ணே... உங்களுடைய நேர்காணலுக்காக எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்... வாங்க அண்ணே, நிகழ்ச்சிக்கு போகலாம்...

**ரஞ்சித்:** ஓகே போகலாம்.

**பில்லி:** உங்களது குடும்பம் மற்றும் சிறுபிராயம் பற்றி சொல்லுங்களேன்?

**ரஞ்சித்:** தேனி மாவட்டதில் உள்ள உத்தம பாளையத்தில் ஒரு பாரம்பரியமிக்க ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்து பக்தியாக வளர்க்கப்பட்டேன். எனது அப்பா electricianஆக இருக்கிறார். அம்மா இல்லத்தரசி, எனக்கு ஒரு அக்கா இருக்கிறார்கள். நான் 8ஆம் வகுப்பு வரை உத்தமபாளையத்தில் உள்ள ஒரு பள்ளியில் படித்தேன். 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை ராயப்பன்பட்டி என்கிற கிராமத்தில் உள்ள ஒரு பள்ளியில் படித்தேன். எனது தாத்தா, அப்பா, சித்தப்பா எல்லோரும் ரோமன் கத்தோலிக்க சபைக்கு வைராக்கியமாய் செல்பவர்கள். அவர்கள் தான் ஆலய Choir-ல் ஹார்மோனியம் வாசிப்பார்கள். அப்படிப்பட்டதான ஒரு கத்தோலிக்க பாரம்பரிய பின்னணியில் தான் எனது குடும்பம் இருந்தது. எனது அம்மா கேரளாவை சேர்ந்தவர்கள். அவர்கள் ஆவிக்குரிய ஆலயத்துக்கு சென்று இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றவர்கள். சிறுவயதில் எங்களுடைய வீட்டிற்கு அருகில் sunday school நடைபெறும். அதற்கு எங்களை அழைத்துச் சென்று பங்கு பெற வைப்பார்கள். எங்கள் ஊரில் நடைபெறும் கன்வென்ஷன் கூட்டங்கள், வாலிபர் கூடுகைகளுக்கு எனது அப்பாவிடம் அனுமதி வாங்கி அனுப்பி வைப்பார்கள். அங்கு நடைபெறும் ஆராதனைகளைப் பார்க்கும் போது எனக்கு அதில் மிகவும் ஆர்வம் உண்டாக ஆரம்பித்தது. ஆனால் ஞாயிறு தோறும் நாங்கள் ரோமன் கத்தோலிக்க ஆலயத்துக்கு தான் செல்ல வேண்டும் என்பதில் என்







தகப்பனார் மிகவும் கண்டிப்புடன் இருந்தார்.

**பில்லி:** சரி... கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்த நீங்கள் இயேசுவை எப்படி அறிந்து கொண்டீர்கள்?

**ரஞ்சித்:** நான் சிறுவயதாக இருக்கும் போது எனது சித்தி ஆவிக்குரிய ஆலயத்துக்கு சென்று வருவார்கள். நான் கத்தோலிக்க சபைக்கு சென்று விட்டு, எனது சித்தியுடன் ஆவிக்குரிய சபைக்கு போக ஆரம்பித்தேன். அந்த சபை போதகர் கிட்டார் வாசித்துப் பாடல்களைப் பாடுவார். எனக்கு சிறுவயதிலிருந்தே கிட்டார் மீது அதிக ஆர்வம் உண்டு. கத்தோலிக்க சபையில் நடக்கும் ஆராதனையில் எனக்கு பெரிய ஈடுபாடு எதுவும் கிடையாது. எனது தகப்பனாரின் கட்டாயத்தினால் நான் அந்த சபைக்கு போவேன். எனது தாயார் அப்பாவுக்கு தெரியாமல் சித்தியோடு அனுப்பி வைப்பார்கள். போகப்போக எனக்கு கிட்டார் மீது அதிக ஈடுபாடு உண்டாக ஆரம்பித்தது. அங்கு இருந்த இசைக் கருவிகளைப் பார்க்கும் போது எப்படியாவது அதை வாசிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் அந்த நாட்களில் அதை வாங்கவோ, பழகவோ வழியில்லாத ஒரு சூழ்நிலையில் இருந்தேன்.

**பில்லி:** Super... சித்தியோடு போக ஆரம்பித்த உங்களுக்கு இசை மீது ஆர்வம் இருந்தது... கற்றுக்கொண்டீர்களா?

**ரஞ்சித்:** நான், என் சித்தி மற்றும் அம்மா உபவாச ஜெபங்களில் கலந்து கொள்வோம். இதனால் எங்கள் வீட்டில் பயங்கர சண்டை நடக்கும். எங்கள் பெற்றோர் சண்டை போடுவதை நானும் எனது அக்காவும் பயத்தோடு பார்த்துக் கொண்டிருப்போம். சில நேரங்களில் எனக்கும் அடி கிடைக்கும். அடிவாங்கினாலும் அடுத்த வாரமும் என் சித்தியுடன் ஆலயத்துக்கு செல்வேன். எனக்கு கிட்டார் மேல் இருந்த ஆர்வத்தினால் அடிவாங்கிக் கொண்டு ஒவ்வொரு வாரமும் செல்வேன். **Sunday school**இல் சொல்லிக் கொடுக்கிற வசனங்கள் எனது உள்ளத்தில் ஆழமாக பதிந்தது. இவை எல்லாமே நான் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளருவதற்கு மிகவும் காரணமாக இருந்தது. சிறுவயதிலிருந்தே நான் பாஸ்டர் ஆகவேண்டுமென்பதே எனது ஆசையாக இருந்தது. யாராவது ''படித்து என்ன ஆகப்போகிறாய்'' என்று கேட்கும் போது ''பாஸ்டர் ஆகப்போகிறேன்" என்று சொல்வேன். 9ஆம் வகுப்பு வரை பல பிரச்னைகளோடும், போராட்டங்களோடும் தான் நான் ஆலயத்திற்கு சென்று வருவேன். அதோடு இசை ஆர்வமும் வளர்ந்தது. இவனை எப்படி அடித்தாலும், திட்டினாலும் நம் பாரம்பரியத்திற்கு வரமாட்டான் என்று அறிந்து என் தகப்பனார் அமைதியாக என்னை விட்டு விட்டார். அதன் பிறகு தொடர்ச்சியாக அந்த சபைக்குப் போக ஆரம்பித்தேன்.

**பில்லி:** ஓகே... உங்களுக்கு இசையின் மீது ஆர்வம் இருப்பதை எப்படி கண்டுபிடித்தீர்கள்?



**ரஞ்சித்:** நான் 4ம் வகுப்பு படிக்கும் போது ஒருமுறை பாஸ்டர் கிட்டாரை வைத்து விட்டு சென்றபோது நான் கிட்டாரை தொட்டு பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டு அதில் என் கை வைத்த போது அழகான சத்தம் வந்தது. இதைப்பார்த்த என் ''பாஸ்டர் உனக்கு கிட்டார் படிக்க ஆசையா'' என்று கேட்டு 3 chords மட்டும் கற்றுக் கொடுத்தார்கள். அதன் பிறகு நானே பேப்பரில் **diagram** வரைந்து கொண்டு போய் அவரிடம் கேட்டுக் கேட்டு கிட்டார் வாசிக்கக் கற்றுக் கொண்டேன். ஆனால் எனக்கு கிட்டார் வாங்க வசதியில்லை. கொஞ்ச நாட்களுக்கு பிறகு பாஸ்டர் கிட்டாரை என்னிடம் கொடுத்து தெரிந்ததை வாசி என்றார்.

நான் அதை வாசிக்க வாசிக்க தேவன் ஞானத்தைக் கொடுத்தார். எனக்கு ஒரு கிட்டார் வாங்க வேண்டும், வீட்டில் வைத்து வாசிக்க வேண்டும் என்று ஆசை



இருந்தது. ஆனால் வசதியில்லாததினால் நானே ஒரு அட்டைப்பெட்டியை எடுத்து அதை கிட்டார் போல் செய்து என் அக்கா தலைக்கு போடப் பயன்படுத்தும் **rubber band**ஐ **string**ஆக வைத்து வாசிப்பேன். இது என்னுடைய சிறுவயது சேட்டைகளாக இருந்தது.

**பில்லி:** ஓகே... உங்களுக்கு இசையின் மீது இருந்த ஆர்வத்தை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது... தொடர்ந்து ஆண்டவருக்கும் உங்களுக்கும் உள்ள உறவு எப்படி இருந்தது?

**ரஞ்சித்:** நான் 5ம் வகுப்பு படிக்கும் போது ஒரு முழு இரவு ஜெபத்திற்கு எனது சித்தியோடு சென்றிருந்தேன். அப்போது அபிஷேகம் பெற்றுக் கொள்ள வாஞ்சையுள்ளவர்களை முன்பாக அழைத்தார்கள். நானும் முன்பு சென்று நின்ற போது, எனது பாஷைகள் மாற ஆரம்பித்ததை என்னால் உணர முடிந்தது. போதகர் எனது தலையில் கை வைத்து ஜெபித்த போது எனக்குள் ஒரு பிரகாசம் வந்ததை உணர்ந்தேன். அப்பொழுது நான் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டேன். சிறுவயதிலிருந்து எனக்கு சளி பாதிப்பு அதிகமாக இருக்கும். இரவு பகலென்று பாராமல் மருத்துவமனைக்கு கொண்டு செல்வார்கள். அபிஷேகம் பெற்ற பிறகு அந்த வியாதி என்னை விட்டு முற்றிலும் விலகிப் போனது. எனது போதகருடன் **Carol rounds** போகும் போதெல்லாம் என்னைவிட பெரிய கிட்டாரை நானே சுமந்து செல்வேன். எனது போதகர் கிராமங்களில் ஊழியத்திற்கு போகும் போது நான் அவருடன் செல்லும்போதெல்லாம் கிட்டார், **speaker box** போன்ற **Instruments** எல்லாமே நானே எடுத்து செல்வேன். நான் 11ம் வகுப்பு படிக்கும் போது **Keyboard** வாசிக்க தேவன் கிருபை கொடுத்தார். நான் யாரிடம் சென்று கற்றுக்கொள்ளவில்லை. என்னுடைய ஆர்வத்தினால் நானே கிட்டார், **keyboard** இரண்டும் கற்றுக் கொண்டேன். அந்த இளம் பருவத்தில் இயேசுவுக்காக எதையாவது செய்ய வேண்டும், அதுமட்டுமல்லாமல் இசையின் மீது எனக்கிருந்த ஆர்வத்தினால் எதுவும் பெரிதாக தெரியவில்லை. தொடர்ந்து 12ஆம் வகுப்பு படித்து நல்ல மதிப்பெண்களுடன் வெற்றிபெற்றேன். எனது இசைப் பயணமும் வெற்றியுடன் சென்று கொண்டிருந்தது.

**பில்லி:** ஓகே... 12ஆம் வகுப்பு படித்து முடித்து தொடர்ந்து படித்தீர்களா? அல்லது இசை பயணத்தை தொடர்ந்தீர்களா?

**ரஞ்சித்:** 12ம் வகுப்பு முடித்த பிறகு திருச்சியில் உள்ள ஒரு கல்லூரியில் **BCA** மற்றும் **MCA** 6 வருடங்கள் படித்தேன். திருச்சியில் நான் படித்துக் கொண்டிருக்கும் போது, நிறைய இடங்களில் மியூசிக் வாசிக்க வாய்ப்புகள் வந்தது. படித்துக்கொண்டே வந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டேன். நான் **MCA** படித்துக் கொண்டிருக்கும் போது அநேக இடங்களில் சென்று பாடவும், மியூசிக் வாசிக்கவும் தேவன் கிருபை கொடுத்தார். கல்லூரியில் மியூசிக் தெரிந்த நல்ல நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் எனக்கு நிறைய காரியங்களை கற்றுக் கொடுத்தார்கள். அந்த நாட்களில் எனக்கு எங்கு வாய்ப்பு





கிடைத்தாலும் அங்கு பாடி ஆராதிப்பேன், மேடைகளில் தான் ஆராதிக்க வேண்டும் என்று நினைக்க மாட்டேன். எனக்கு கர்த்தரை எப்பொழுதுமே ஆராதித்துக் கொண்டிருப்பது மிகவும் பிடிக்கும். என்னுடைய படிப்பு ஒருபக்கம் இருந்தாலும், மறுபக்கம் தேவ இராஜ்ஜியத்திற்கு அடுத்ததாக இருந்தது. என்னுடைய கல்லூரிப் படிப்பை 6 வருடங்கள் நேர்த்தியாக படித்து முடித்து, வேலைக்கு முயற்சி செய்து ஒரு கம்பெனியில் வேலைக் கிடைத்து சென்னைக்கு சென்றேன். நல்ல சம்பளத்துடன் 5 வருடங்கள் வேலை செய்தேன். சனி, ஞாயிறு நாட்களில் அநேக இடங்களில் சென்று ஆராதனை நடத்த தேவன் கிருபை கொடுத்தார்.

**பில்லி:** அருமை நல்ல சம்பளத்துடன் வேலை செய்த உங்களுக்கு ஊழிய அழைப்பு எப்படி வந்தது? எப்பொழுது முழுநேர ஊழியத்திற்கு வந்தீர்கள்?

**ரஞ்சித்:** 2018ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் தேதி எனக்குத் திருமணம் நடந்தது. என் மனைவியின் பெயர் சலோமி. அவர்கள் ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள். திருமணமாகி நாங்கள் சென்னையில் இருந்தோம். எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். திருமணம் முடிந்த பிறகு 6 மாதங்கள் அதே வேலையை தொடர்ந்து செய்து வந்தேன். 6 மாதத்திற்கு பின்பு தேவன் முழுநேர ஊழியத்திற்கு என்னை அழைத்தார். ஆண்டவரின் அழைப்பைப் பற்றி என் குடும்பதினரிடம் கூறியபோது, திருமணம் முடிந்த ஆறே மாதத்தில் முழுநேர ஊழியத்திற்கு வருவதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனக்கு அதிக கடன் இருந்ததால் நானும், ''ஆண்டவரே ஊழியத்திற்கு நான் வரவில்லை, கடனை அடைக்க இன்னும் அதிக சம்பளத்துடன் நல்ல ஒரு வேலையைக் கொடும்'' என்று ஜெபித்தேன். ஆண்டவரை நம்புவதை விட்டு சம்பளப் பணத்தை நம்ப ஆரம்பித்தேன். என் குடும்ப சூழ்நிலை அப்படி இருந்ததினால் ஊழியத்திற்கு வரமாட்டேன் என்று பிடிவாதத்துடன் இருந்தேன். ஒருபுறம் கர்த்தருடைய அழைப்பு, மறுபுறம் குடும்பத்தின் சூழ்நிலை. ஆண்டவரை விட்டு கொஞ்சம் தடம்புரள ஆரம்பித்தேன். என் தாயார் நல்ல ஜெபிக்கிற விசுவாசிக்கிற தாயார் தான், ஆனால் கடன் பிரச்சனைகள் குடும்ப சூழ்நிலைகள் நிமித்தம் என்னை முழு நேர ஊழியத்திற்கு அனுப்ப மறுத்தார்கள். கடைசியாக வேறு கம்பெனியில் வேலைக்கு சேர்ந்தேன். அங்கு எனக்கு விரோதமாக பல பிரச்சனைகள் வந்தன. அப்பொழுதுதான் ஆண்டவரின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து ஜெபித்து என் வேலையை இராஜினாமா செய்து முழுநேர ஊழியத்திற்கு என்னை ஒப்புகொடுத்தேன். 2019ஆம் ஆண்டு முதல் முழுநேரமாக கர்த்தருக்கென்று ஊழியம் செய்து வருகிறேன். வீட்டிலிருந்து பயங்கர பிரச்சனைகள் வர ஆரம்பித்தன. ஊழியத்தின் ஆரம்ப நாட்களானதால் வீட்டிற்கு மாதந்தோறும் பணம் அனுப்ப முடியவில்லை.

**பில்லி:** சரி... ஊழியத்திற்கு வந்தீர்கள்... ஊழியத்தை சிறப்பாக செய்ய முடிந்ததா?

**ரஞ்சித்:** இல்லை... நிறைய ஊழியர்கள் எனக்கு எதிராக எழும்பினார்கள். என்னை ஜெபத்தில் நடத்திய எனது தாயார் எனக்கு விரோதமாக எழும்பினார்கள். அப்போதும் கூட ஆண்டவரே என்னை விட்டு விடும், நிறைய போதகர்கள் இருக்கிறார்கள் அவர்களை வைத்து செய்யும், நான் திரும்பவும் அதே வேலைக்கு செல்கிறேன், நல்ல காசு சம்பாதிக்கிற மாதிரி ஒரு வேலையைத் தாரும் என்று ஜெபித்தேன். அப்போது ''தேசத்தின் வாலிபர்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள், தேசம் அழிந்து கொண்டிருக்கிறது'' என்று ஆண்டவர் அவருடைய



மனதின் ஆதங்கத்தை என்னோடு பேசினார். பாடல்கள் மூலம் தேவன் எனக்கு வார்த்தைகளைக் கொடுத்து தேற்றினார். ஆண்டவர் எனக்கு நிறைய பாடல்களை கொடுத்திருந்தார். அதையெல்லாம் எழுதி வைத்திருந்தேன். ஊழிய பாதையில் சோர்ந்து போய் இருந்தபோது நம்பத்தக்கவர் நீர் ஒருவர் தானே'' என்ற பாடலை கொடுத்து என்னை வழிநடத்தினார். 2017ம் வருடம் முதன்முதலாக ''நிசி'' என்ற **C.D.** வெளியிட தேவன் கிருபை செய்தார். ஆண்டவர் ஊழியத்தில் படிப்படியாக உயர்த்த ஆரம்பித்தார். பல இடங்களிலிருந்து அழைப்புகள் வந்தன. எவற்றையெல்லாம், யாரை எல்லாம் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தேனோ அவர்களோடு இணைந்து தேவனை ஆராதிக்கவும், தேவனுடைய வார்த்தைகளை பிரசங்கிக்கவும் தேவன் அனுகூலமான வாசல்களை திறந்து கொடுத்தார். இப்போது ஆண்டவர் பல தேசங்களுக்கு கொண்டு செல்கிறார். அன்றைக்கு ஆண்டவருடைய திட்டத்திற்கு ஒப்புக் கொடுக்கும் போது பாடுகளும், உபத்திரவங்களும் திரளாய் வந்தன. இன்றைக்கு எல்லா கடன்களையும் அடைத்து ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார். நான் தேவ அழைப்பை விட்டு உலக வேலைக்கு சென்றிருந்தால் கூட இன்றைக்கு என்னால் அந்த கடனை அடைத்திருக்க முடியாது. நம்முடைய தேவனால் எல்லாம் கூடும்.

**பில்லி:** வாலிபர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல வீரும்புகிறீர்கள்?

**ரஞ்சித்:** அழைத்தவர் உண்மையுள்ளவர். யோசேப்பு சிறு வயதில் பார்த்த தரிசனம், எல்லாருடைய அரிகட்டுகளும் சாய்ந்து நிற்கும் போது இவருடைய அரிகட்டு மட்டும் நிமிர்ந்து நிற்கிறது. தேவன் தரிசனத்தை கொடுத்தால் கண்டிப்பாக சிங்கானத்தில் அமர வைப்பார். யாரையும் வெட்கப்படுத்தமாட்டார். எந்த மனுஷனையும் உயர்த்தவும் மேன்மைபடுத்தவும் தேவனால் முடியும். என்ன சூழ்நிலையாக இருந்தாலும் தேவ பிரசன்னத்தில் இருந்து அவரை மட்டும் உயர்த்தி, அவரை மட்டும் மகிமைப்படுத்த நீங்கள் கற்றுக் கொள்வீர்களானால் உயர்வுகளையும், ஆசீர்வாதங்களையும் நாம் தேடிப் போக வேண்டிய அவசியமில்லை. தேவனே அவைகள் நம்மைத் தேடி வர வைப்பார். தேவனை சார்ந்து வாழ ஆரம்பித்தீர்களானால் எப்பேர்பட்ட நிலமையிலிருந்தாலும் உங்களை உயர்த்தி அழகு பார்த்து மேன்மைபடுத்துவதற்கு தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார்.



**பில்லி:** ஆமென்! மெய்யாகவே ஆண்டவர் உங்களை நடத்தி வந்த விதத்தை பார்க்கும்பொழுது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது அண்ணன். எங்கள் வாலிபர்களை உங்கள் சாட்சியின் மூலம் உற்சாகப்படுத்தியமைக்கும், உங்களின் **busy** ஊழியத்தின்போதும் எங்களுக்கு நேரம் ஒதுக்கியதற்கும் மிகவும் நன்றி. கர்த்தர் உங்களையும், குடும்பத்தையும், ஊழியத்தையும் மென்மேலும் ஆசிர்வதிக்க ஜெபித்துக்கொள்கிறோம்.



# குடியரசு என்றால் என்ன?

மக்களே தங்களை ஆள்பவர்களைத் தேர்வு செய்யும் உரிமை கொண்டுள்ள அமைப்பு 'ஜனநாயகம்' (Democracy) என்று அழைக்கப்படுகிறது.

மக்களால் தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத்தில் இருக்கும் அரசு அமைப்பு 'குடியரசு' (Republic) எனப்படுகிறது.

## குடியரசு நாள் என்றால் என்ன? குடியரசு நாள் ஏன் கொண்டாடப்படுகிறது?

**இந்திய அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த நாள் குடியரசு நாள் ஆகும்.**

**இந்திய அரசமைப்புச் சட்டம் என்பது இந்தியாவின் ஆட்சி நிர்வாகத்திற்கான விதிகளைக் கொண்டுள்ள ஆவணம் ஆகும். அதற்கு முன் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்திய அரசுச் சட்டம், 1935 (Government of India Act , 1935) இந்த தகுதியைப் பெற்றிருந்தது.**

# வேதாகம புதையல் வேட்டை

கர்த்தர் இந்த உலகத்தைப் பல வண்ணங்களில் சிருஷ்டித்திருக்கிறார். அந்த அழகு நிறங்களில் தான் எத்தனை ஆச்சரியங்கள். வேதத்தில் கூட பல வண்ணங்கள் பேசப்பட்டுள்ளன. உங்கள் எண்ணங்களை வேதத்தின் வண்ணங்களிடம் திருப்பி கீழ்வரும் வினாக்களுக்கு வேத ஆதாரத்துடன் விடையை எழுதி அனுப்பவும்.

1. ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை எந்த கூழிற்காக விற்றான்?
2. நல்ல கனியும் நேர்த்தியும் கொண்ட ஒலிவ மரத்தின் நிறம் என்ன?
3. மூன்றாம் முத்திரையை உடைத்த போது பார்த்த குதிரையின் நிறம் என்ன?
4. தூஷணமான ஏழு தலைகளையும் பத்து கொம்புகளையும் கொண்ட மிருகத்தின் நிறம் என்ன?
5. ஆண்டவர் இயேசுவுக்கு போர்ச்சேவகர் உடுத்திய மேலங்கியின் நிறம் என்ன?
6. சிங்காசனங்கள் மேல் வீற்றிருந்தவருடைய சிரசின் மயிரின் நிறம் என்ன?
7. பாவத்தின் நிறம் என்ன?
8. நான்காம் முத்திரையை உடைத்தபோது பார்த்த குதிரையின் நிறம் என்ன?
9. சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வரும் நதி எப்படிப்பட்டது?
10. ஏபோத்தின் கீழிருக்கும் அங்கியில் இருக்கும் நூலின் நிறம் என்ன?







கடந்த மாத வெற்றியாளர்:
சகோதரி **ஏஞ்சலின்** (கேரளா)
**அவர்களை வாழ்த்துகிறோம்.**

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.01.2024**

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

### கடந்த மாத விடைகள்

1. அன்பு
2. நீதி
3. தேவ பக்தியுள்ள
4. விசுவாசம்
5. தாழ்மை
6. நீண்ட பொறுமை
7. தன் சிலுவையை
8. கீழ்ப்படிகிறதே
9. மனதுருகி
10. சாந்த குணம்

முகப்பு செய்தி: சதீஷ்

# தீங்குக்கு விலக்குவார்!





என் அன்பிற்குரிய வாலிப பிள்ளைகளே, கர்த்தர் இந்தப் புதிய வருடத்திலும் உங்களுக்கு வாக்குக் கொடுத்து, உங்களை ஆசீர்வதித்து, பெலப்படுத்த விரும்புகிறார். இந்த வருடத்தின் வாக்குத்தத்தம் என்னவென்றால் "கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்" என்பதே. அதாவது என் மக(னே)ளே, "நீ பயப்படாதே! கலங்காதே! நான் உன்னை காத்துக் கொள்கிற தேவன்!" (சங். 121:7) என்று உங்களுக்கு அவர் வாக்குக் கொடுக்கிறார்.

இன்றைக்கு இந்த உலகத்தை நோக்கிப் பாருங்கள்! ஒரு பக்கம், புயல், வெள்ளம், பனி, தீ மற்றும் கடல் கொந்தளிப்பு போன்ற இயற்கையினால் உண்டாகிற ஆபத்துகள்! இன்னொரு பக்கம், விநோதமான நோய் கிருமிகளினாலும், கொள்ளை நோய்களினாலும் உண்டாகிற பாதிப்புகள் மனிதர்களை கலங்கப் பண்ணுகின்றன! இன்னொரு பக்கம், பஞ்சம்! அதனால் மக்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிற ஒரு சூழ்நிலை. இப்படிப்பட்ட பல விதமான சூழ்நிலைகள் மனிதர்களுக்குள்ளே பயத்தையும், கலக்கத்தையும் கொண்டு வருகிறதை நாம் பார்க்கிறோம்.

ஒருவேளை இந்த நாட்களில் நீங்களும் கூட, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையின் மத்தியில் கடந்து போய் கொண்டிருக்கலாம்! ஆனால், உங்கள் மீது அக்கறையுள்ள தேவனாகிய கர்த்தர் உங்களைப் பார்த்து, என் மகனே(ளே), 'நீ பயப்படாதே! கலங்காதே! எந்த சூழ்நிலையிலும் நான் உன்னை பாதுகாத்து நடத்துவேன்' என்று உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறார். மனிதர்கள் நமக்கு விரோதமாக பல காரியங்களைச் செய்து, தீமைகளை உண்டாக்குகிற பலவிதமான சூழ்நிலைகள் இருந்தாலும், கர்த்தர் இன்றைக்கு உங்களைப் பாதுகாப்பதாக வாக்குக் கொடுக்கிறார். அவர் வாக்குக் கொடுத்தால், கட்டாயம் அதை நிறைவேற்றுவார்!

நம்முடைய அனுதின வாழ்க்கையில் ஆண்டவர் நம்மை பாதுகாக்கும் விதங்களைக் குறித்து நாம் தியானிக்கலாம்.

## ஆத்துமாவைக் காப்பார்!

**"அவர் (கர்த்தர்) உன் ஆத்துமாவைக் காப்பார்." (சங்கீதம் 121:7)** இதுதான் கர்த்தர் நமக்குச் செய்கிற முதல் காரியம்! நம்முடைய வாழ்க்கையில், வியாதிகள், இழப்புகள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள் என்று, அநேக ஆபத்துக்கள் வருவது உண்மைதான். ஆனால்,



நமக்குள் ஒரு ஆத்துமா இருக்கிறது. அந்த ஆத்துமாதான் கர்த்தரோடு தொடர்பு கொண்டு, அவர் கொடுக்கிற சமாதானத்தையும், நிம்மதியையும் நமக்குள் உண்டாக்குகிறது. அந்த ஆத்துமாவில் ஒரு தேவ சமாதானமும், சந்தோஷமும் இருந்தால்தான் மெய்யான ஆசீர்வாதம். ஆனால் பொல்லாத பிசாசானவன்

அதைக் கறைப்படுத்தி, கர்த்தரை விட்டு நம்மைப் பிரிக்க முயற்சி செய்வான்.

அதாவது, ஒரு மனிதன் பாவத்தில் வாழும்போது, அவனுடைய ஆத்துமா மரித்துப் போய் விடுகிறது! ‘‘பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்’’ (எசேக்கியேல் 18:4) என்று கர்த்தருடைய வார்த்தை சொல்லி இருக்கிறபடி, எந்த மனிதன் பாவத்திற்கு இடம் கொடுக்கிறானோ, அவனுக்குள் இருக்கிற ஆத்துமா மரித்து விடும். அதாவது, சரீரம் உயிருள்ளதாகத்தான் இருக்கும். ஆனால், பாவத்தின் நிமித்தமாக அவனுடைய ஆத்துமா மரித்துப் போய் விடுகிறபடியினால், கர்த்தரோடு அவனுக்கு இருக்கிற தொடர்பு துண்டிக்கப்பட்டு விடும். எனவேதான் மனிதர்கள் சில சமயங்களில், ‘‘மனதில் நிம்மதியே இல்லை! சமாதானமே இல்லை! வாழவே பயமாக இருக்கிறது!’’ என்று சொல்லிப் புலம்புகிறார்கள்.



ஒரு மனிதனுடைய ஆத்துமா உயிரடைந்தால்தான், கர்த்தரோடு ஐக்கியப்பட்டு, பாவ மன்னிப்பின் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அவனால் உணர முடியும். ஆனால், பொல்லாத பிசாசானவன் தொடர்ந்து நம்முடைய ஆத்துமாவை குறி வைத்து, பாவத்தைக் கொண்டு வந்து, கர்த்தரை விட்டு நம்மைப் பிரிக்கப் போராடுவான். ஆகவே, நம்முடைய ஆத்துமா பாதுகாக்கப்பட வேண்டியது மிக மிக முக்கியம்.

எனக்கு அன்பான வாலிபர்களே, உங்கள் ஆத்துமாவை பாதுகாத்துக் கொள்வதில்தான் நீங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதற்கு, தினந்தோறும் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து, பரிசுத்த ஆவிக்குள் நிரம்பி ஜெபிக்க வேண்டும்! கர்த்தருடைய வசனங்களைக் கேட்க வேண்டும்! காரணம், நமக்குள் இருக்கிற ஆத்துமா விலையேறப் பெற்றது! அந்த ஆத்துமா பாதுகாக்கப்பட வேண்டும். நான் வாலிபனாக இருக்கும் போது, கர்த்தர் என்னை ஊழியத்திற்கென்று அழைத்து, பயன்படுத்த ஆரம்பித்த நாட்களில் பல திருச்சபைகளில், சில நற்செய்திக் கூட்டங்களில் பிரசங்கம் பண்ணி முடித்த பிறகு, சிலர் வந்து என்னை பாராட்டுவார்கள். ஆனால் சிலர் ‘‘தம்பி, வாலிப வயதில் கர்த்தர் உங்களை நன்றாகத்தான் பயன்படுத்துகிறார்! ஆனால், கடைசிவரை நிலைநிற்க வேண்டுமே?’’ என்று சொல்லி விட்டுப் போவார்கள். இந்த வார்த்தைகளை திரும்பத் திரும்பக் கேட்ட போது, கடைசி வரை நிலை நிற்க முடியாமல் விழுந்து போய், கர்த்தரை விட்டு நான் பின்வாங்கிப் போய் விடுவேனோ? என்று எனக்குள்ளே ஒரு சந்தேகமும், பயமும் வந்து விட்டது. அந்த சமயத்தில், சில தேவ ஊழியர்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போன சில சம்பவங்களையும் நான் கேள்விப்பட்டபோது, எனக்குள் இன்னும் பயம் அதிகமாகி விட்டது. நான் ஜெபத்தோடு ஊழியம் செய்தாலும், என் மனதிற்குள்ளாக அந்த தாக்குதல் இருந்து கொண்டேதான் இருந்தது. அது சாத்தானால் உண்டான தாக்குதல்! என்று அந்த நாட்களில் எனக்கு தெரியவில்லை. அதனால் என் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு பெரிய போராட்டம்! இதை யாரிடத்திலும் சொல்லக் கூட முடியாதபடி எனக்குள் ஒரு கலக்கம் இருந்தது.

அந்த சமயத்தில் ஒருநாள், ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் ஊழியத்தை முடித்து விட்டு ஊருக்குத் திரும்புகிறபோது, ஒரு வயதான தகப்பனார் தன் வலது கையை என் தோள் மீது வைத்து, தம்பி, ‘‘அன்றைக்கு யோசேப்பை காத்துக் கொண்ட கர்த்தர், இந்த வாலிப நாட்களில் அவருக்காக ஊழியம் செய்கிற உங்களையும் காத்துக் கொள்வார்’’ என்று சொல்லி விட்டு, போய் கொண்டே இருந்தார். அவ்வளவுதான்! அந்த வார்த்தை எனக்குள்ளே ஒரு விசுவாசத்தையும், தைரியத்தையும் கொடுத்தது. யோசேப்பை பாவத்திற்குள் தள்ளும்படியாக, அவர் தங்கி இருந்த இடத்திற்குள்ளாகவே பிசாசானவன் ஒரு சோதனையைக் கொண்டு வந்தான். ஆனால், கர்த்தர் அவரைக் காத்துக் கொண்டார். அதுவரை நான், யோசேப்பு அந்தப் பாவத்தை விட்டு விலகி ஓடி, தன்னை பரிசுத்தமாக காத்துக் கொண்டதினால்தான், கர்த்தர் அவரோடு கூட இருந்தார்’’ என்பதாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், அந்த தகப்பனார் சொன்ன வார்த்தையை கேட்ட பிறகு, நான் பரிசுத்த வேதாகமத்தை எடுத்து வாசித்த போது கர்த்தர் எனக்கொரு சத்தியத்தை விளங்கப் பண்ணினார். அதாவது, மகனே, ‘‘யோசேப்பு பாவத்திற்கு விலகி ஓடியதினால் அல்ல; நான் அவனோடு கூட இருந்ததினால்தான் அவன் அந்தப் பாவத்தில்

விழுந்து விடாதபடி விலகி ஓடினான். யோசேப்பை நான் பாதுகாத்துக் கொண்டதைப்போல உன்னையும் பாதுகாப்பேன்'' என்று சொல்லி என்னை உயிர்ப்பித்தார். இன்றைக்கு என் ஊழியத்தின் பாதையில், 45 வருடங்களாகி விட்டது! எத்தனையோ சோதனைகள், போராட்டங்கள், என்னை குற்றப்படுத்தி விழத் தள்ளுவதற்காக பிசாசினுடைய எத்தனையோ தந்திரங்கள், எல்லாவற்றிலிருந்தும் விலக்கி இம்மட்டும் காத்துக் கொண்ட கர்த்தர், கடைசி வரை என்னை காத்து நடத்துவார் என்று நான் விசுவாசிக்கிறேன். ஏனென்றால், என் ஆத்துமாவை பாதுகாத்து நடத்துகிறவர் கர்த்தர்.

எனக்கு பிரியமான வாலிப மகனே, மகளே! அவருடைய கையில் உங்களை ஒப்புக் கொடுப்பதுதான் உங்களுடைய வேலை! உங்களைப் பாதுகாத்து நடத்துவது, அவருடைய வேலை!



## போக்கையும், வரத்தையும் காப்பார்!

**“கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்” (சங்கீதம் 121:8).**

கர்த்தர் நம்முடைய ஆத்துமாவை மாத்திரமல்ல, ‘‘உன் போக்கையும், வரத்தையும் நான் காப்பேன்'' என்று நமக்கு வாக்குக் கொடுக்கிறார். இன்றைக்கு, இரயில், பேருந்து, வேன், கார், பைக், சைக்கிள், விமானம் என்று நாம் செய்கிற பிரயாணங்களில் எத்தனையோ ஆபத்துகளும், விபத்துகளும் நடக்கிற செய்திகளை தினந்தோறும் கேள்விப்படுகிறோம். அப்படியானால், நம்முடைய பிரயாணத்தில் நமக்கு பாதுகாப்பு அவசியம்.

என் ஊழியத்தின் ஆரம்பக் காலத்தில், ஒருநாள் ஊழியத்தின் நிமித்தமாக நான் நாலுமாவடியிலிருந்து, திருநெல்வேலிக்கு காரில் போய் கொண்டிருந்தேன். டிரைவர் காரை ஓட்டிக் கொண்டு போக, நான் பின் சீட்டில் குனிந்தபடி அமர்ந்து, ஜெபிக்கும்படியாக ஜனங்கள் அனுப்பியிருந்த கடிதங்கள் மற்றும் ஜெபக் குறிப்புகளை வாசித்து, ஜெபம் பண்ணிக் கொண்டே இருந்தேன். நான் அதிக நேரம் குனிந்தே இருந்தபடியினால், என் முதுகுப் பகுதி வலிக்க ஆரம்பித்தது. உடனே நான் சற்றுத் தலையை நிமிர்ந்து பார்த்தபோது, சாலையின் இடது பக்கமாகப் போக வேண்டிய கார், கட்டுப்பாடு இல்லாமல் வலது பக்கமாக போய்க் கொண்டிருந்தது. எதிர்திசையிலிருந்து ஒரு பேருந்து வேகமாக வந்து கொண்டிருந்தது. உடனே, என்ன இது? தவறான பாதையில் கார் போகிறதே! என்று யோசித்தவனாக டிரைவரை பார்த்தபோது, அவர் தூங்கிக் கொண்டிருந்தார்! எப்படி இருந்திருக்கும்? என்று சற்று யோசித்துப் பாருங்கள். கண்ணிமைக்கும் நேரத்தில் நான் டிரைவரை தட்டி எழுப்பினேன். டிரைவர் உடனே சுதாரித்துக் கொண்டு, இடது பக்கமாக காரை திருப்பி விட்டார். பாருங்கள்; ஒரு நொடிப் பொழுதில் நாங்கள் பாதுகாக்கப்பட்டோம். இல்லையென்றால், அன்றைக்கே என்னுடைய ஓட்டம் முடிந்து போயிருக்கும்.

எனக்கு அன்பான பிள்ளைகளே, நம்மை பாதுகாப்பாக நடத்திக் கொண்டு போவார்கள் என்று நாம் நம்புகிற மனிதர்கள் ஒருவேளை தூங்கி விடக் கூடும். ஆனால், **“..., இஸ்ரவேலைக் (கர்த்தருடைய பிள்ளைகளை) காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை” (சங்கீதம் 121:4)** என்பதாக பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. நம்முடைய போக்கையும், வரத்தையும் பாதுகாக்கிறவர் கர்த்தர்.

## எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்!

**“கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்;...” (சங்கீதம் 121:7).**

எனக்கு அன்பான பிள்ளைகளே, நாம் வாழ்கிற இந்தக் காலம், கடைசிக் காலம்! நம்மைச் சுற்றிலும் எப்போதும் அநேக தீமையான காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. மத்தேயு 24ம் அதிகாரத்தில், இயேசு கிறிஸ்து எச்சரித்து சொன்ன கடைசி காலத்தின் அடையாளங்களான, பஞ்சங்கள், கொள்ளை நோய்கள்,

பூமி அதிர்ச்சிகள், கடல் கொந்தளிப்புகள், பொல்லாத மனிதர்களால் வரக் கூடிய ஆபத்துகள், தாக்குதல்கள் ஆகியவை இன்றைக்கு இந்த பூமியில் நடந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு மனிதனுடைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், இன்றைக்கு மனிதனுக்கே ஆபத்தாக மாறி இருக்கின்றன! நோய்க் கிருமிகளை தாங்களே உருவாக்கி, மனுக் குலத்திற்கு அழிவை உண்டாக்குகிற பொல்லாத மனிதர்கள் பெருகிவிட்ட காலம்! கொடூரமான ஆயுதங்களை உருவாக்கி, பல்லாயிரக் கணக்கான மைல்கள் தூரத்தில் இருந்து கொண்டே தேசங்களை அழிக்கிற பொல்லாத காலம்! அதே சமயத்தில், பொருளாதாரப் பாதிப்புகளும், கொள்ளை நோயினால் உண்டாகிற பாதிப்புகளும், பஞ்சத்தினால் உண்டாகிற பாதிப்புகளும், எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு பில்லி–சூனியங்களும், மந்திரவாதங்களும் தேசங்களில் பெருகிவிட்டன. பிசாசானவன் மறைந்திருந்து இது போன்ற பல விதமான தாக்குதல்களை நடத்துகிறான்.



**“பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்” (1 பேதுரு 5:8)** என்பதாக கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. ஆனால் அன்றைக்கு தம்முடைய தூதனை அனுப்பி, சிங்கங்களின் வாயிலிருந்து தானியேலைப் பாதுகாத்த கர்த்தர் (தானியேல் 6:22), இன்றைக்கு தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிட்டு, நம்மையும் பாதுகாத்து நடத்த வல்லமை உள்ளவராக இருக்கிறார்.

‘சுனாமி’ வந்த போது சென்னையில் நடந்த ஒரு சம்பவத்தை, அன்பு சகோதரர் சாம் ஜெபத்துரை அவர்கள், ஒருமுறை இப்படியாக என்னிடத்தில் சொன்னார்கள். ஒரு நிறை மாத கர்ப்பிணி, கடற்கரையோரத்தில் மீன் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது திடீரென்று சுனாமி அலை எழும்பி, கரையை நோக்கி பயங்கரமாக பாய்ந்து வந்தது. அந்தப் பகுதியில் இருந்தவர்கள் அனைவரும் கரையை நோக்கி ஓடினார்கள். ஆனால், அந்த சகோதரியால் வேகமாக ஓட முடியவில்லை. அந்த இக்கட்டான நேரத்தில் அந்த சகோதரி, இயேசுவே, இதற்கு மேல் என்னால் ஓட முடியவில்லை. இந்த ஆபத்திலிருந்து என்னை காப்பாற்றும்’’ என்று, கர்த்தரை நோக்கி அபயமிட்டார்கள்.

அப்போது அங்கே ஒரு ஆச்சரியமான காரியம் நடந்தது. சீறிப் பாய்ந்து வந்த அந்த சுனாமி அலை இரண்டாகப் பிரிந்து, அந்த சகோதரி இருந்த இடத்திற்கு வராமல், இரண்டு பக்கமாக கடந்து சென்று விட்டது. அந்த சகோதரி பத்திரமாக தன்னுடைய வீட்டிற்குள்ளாகப் போய் விட்டார்கள். ‘இயேசு கிறிஸ்து எவ்வளவு அற்புதமானவர்!’ என்று பார்த்தீர்களா? இயற்கைக்கும் மேற்பட்ட அற்புதங்களைச் செய்கிற கர்த்தர், தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு அற்புதங்களைச் செய்து, அவர்களைப் பாதுகாக்கிறவராக இருக்கிறார். ஆகவே, சோர்ந்து போகாதீர்கள்! கர்த்தருடைய வாக்குத்தத்தத்தையும், வல்லமையும் விசுவாசித்து, நீங்கள் ஒரு சின்ன ஜெபத்தை ஏறெடுத்தாலும், அந்த ஜெபத்தையும் அவர் கனப்படுத்தி, அற்புதம் செய்து, உங்களை பாதுகாத்து நடத்துவார்.

**எனக்கு பிரியமான வாலிப மகனே, மகளே! தீமைகளும், பொல்லாங்குகளும், வியாதிகளும், ஆபத்துகளும் பெருகிப் போய் இருக்கிற இந்தக் காலத்தில், “எந்த விதமான தீங்கும் உன்னை சேதப்படுத்தாதபடி நான் உன்னை விலக்கிப் பாதுகாப்பேன்” என்று கர்த்தர் வாக்குக் கொடுக்கிறார். கர்த்தர் வாக்குக் கொடுத்தபடியே இந்த ஆண்டு முழுவதும் உங்கள் ஆத்துமாவையும், உங்கள் போக்கையும், வரத்தையும் பாதுகாத்து எல்லா தீங்குக்கும் விலக்கிக் காப்பார். நீங்கள் இயேசுவோடு இன்னும் நெருக்கமாக வாழ்வதற்கு அர்ப்பணித்து கொள்ளுங்கள்!**





# பள்ளிக் கல்லூரிக் கூடுகைகள்!

ஒவ்வொரு ஆண்டும் பள்ளிக் கல்லூரிகளில் சென்று சுவிசேஷம் அறிவித்து அதன்மூலம் அநேக வாலிபர்களை இரட்சிப்புக்குள் நடத்த தேவன் கிருபை செய்து வருகிறார். இந்த வருடமும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பள்ளிக் கல்லூரிகளுக்குச் சென்று, படிப்பைக் குறித்த எண்ணமோ, வாஞ்சையோ இல்லாமல் சோர்ந்து போய் இருந்த மாணவ மாணவியருக்கு இயேசுவைக் குறித்து அறிவித்ததோடு, எதிர்காலம் மற்றும் படிப்பைக் குறித்து பயத்தோடு இருந்த மாணவ மாணவியரை உற்சாகப்படுத்தி, அவர்கள் மனதில் உள்ள தாழ்வு மனப்பான்மை எண்ணங்களை மாற்றி, தன்னம்பிக்கைக் கொடுத்து ஊக்கப்படுத்த தேவன் கிருபை செய்தார். பள்ளிக் கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜெபக்குழுக்களில் அநேகர் இணைந்து ஜெபித்தும் வருகின்றனர். கடந்த 2023ம் வருடம் மட்டும் **45,000** மாணவ மாணவியர்களுக்கு ஆலோசனைக் கொடுத்து நற்செய்தி சொல்ல தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!



































# புத்தாண்டு தீர்மானங்கள்...

**2023ஆம் ஆண்டு முடிவிலேயே அநேகர் புத்தாண்டு தீர்மானங்களை எடுப்பார்கள். ஆனால் அந்த தீர்மானங்களை ஒருசிலரே நிறைவேற்றி முடிப்பார்கள். நாம் எடுக்கும் தீர்மானங்கள் நம்மால் நிறைவேற்றி முடிக்கக் கூடியவையாக இருக்க வேண்டும். 2024 ஆம் ஆண்டு நீங்கள் எடுக்க கூடிய ஒரு சில தீர்மானங்கள்..**



- தினமும் 1 மணி நேரம் உடற்பயிற்சி செய்தல்.
- சமையல், தையல் போன்ற ஏதாவது ஒன்றைக் கற்றுக் கொள்ளுதல்.
- பணியிடத்தில் பதவி உயர்வு பெற நினைப்பவர்கள் மேல்படிப்பு படித்தல்.
- புதிய மொழிகளைக் கற்றுக்கொள்ளுதல்.
- தினமும் பொது அறிவு புத்தகத்தைப் படித்தல்.
- தினமும் டைரி எழுதுதல்.
- தினமும் குடும்பத்துடன் நேரம் செலவிடுதல்.
- தினமும் காலையில் செய்தித்தாளைப் படித்தல்.
- தினமும் அதிகாலையில் எழும்புதல்.
- சரியான நேரத்தில் சாப்பிடுதல்.
- சமூக வலைத்தளங்களில் நேரம் செலவிடுவதை குறைத்தல்.
- உங்களுக்கு பிடித்த இடங்களுக்கு பயணம் செய்தல்.
- சிறிய விஷயங்களுக்கு நன்றி சொல்லும் பழக்கத்தை ஏற்படுத்துதல்.
- கடையில் உணவு வாங்கி சாப்பிடுவதை தவிர்த்து வீட்டிலேயே சமைத்து சாப்பிடுதல்.
- நல்ல சுகாதாரத்தை கடைபிடித்தல்.
- சம்பள பணத்தில் 20%மாவது சேமித்தல்.
- புகைப்பிடித்தல், குடிப்பது போன்ற ஏதேனும் பழக்கம் இருந்தால், ஆரோக்கியமான வாழ்க்கை வாழ அந்த பழக்கங்களை கைவிடுதல்.
- ஏழை மாணவர்களுக்கு இலவசமாக கல்வி கற்றுக்கொடுத்தல்.
- பிடித்த இடங்களுக்கு சுற்றுலா செல்லுதல்.
- நல்ல நண்பர்களை உருவாக்கிக் கொள்ளுதல்.
- இந்த ஆண்டிலிருந்து யாரிடமும் கடன் வாங்க கூடாது என்று முடிவெடுத்தல்.






**இதுபோன்ற புத்தாண்டு தீர்மானங்களை எடுத்துவிட்டு அப்படியே விட்டுவிடாதீர்கள். நீங்கள் எடுத்தக் காரியத்தை நிறைவேற்ற உங்கள் முழுப் பங்களிப்பை கொடுப்பது அவசியம். விடாமுயற்சி எப்பொழுதுமே வெற்றி தான் என்பதை மறந்துவிடாமல் உங்களை மெருகேற்றிக்கொள்ள சில நல்ல தீர்மானங்களை எடுத்து வாழ்க்கையில் முன்னேறுங்கள்.**

# வாலிபர் உலகம்

## பத்திரிக்கை ஊழியம்





வாலிபர் உலகம் மாதாந்திர பத்திரிக்கை 2009ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல், தமிழ் மொழியில் ஒவ்வொரு மாதமும் 14 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டு, தமிழ்நாடு முழுவதுமுள்ள வாலிபர்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியா மற்றும் பிற தேசங்களில் உள்ள வாலிபர்களும் பயன்படும் விதத்தில், ஆங்கிலப் பத்திரிக்கை, 2014ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் முதல் வெளியிடப்பட்டு வருகிறது. மலையாளம் பேசும் வாலிபர்களுக்கு மலையாள மொழியில், 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் அனுப்பப்பட்டு வருகிறது. ஹிந்தி, தெலுங்கு மற்றும் கன்னட மொழி பத்திரிக்கைகள் நமது வெப்சைட்டில் (www.jesusredeems.com) பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

**வாலிபர்களுக்கென்றே பிரத்யேகமாக மாதந்தோறும் 6 மொழிகளில், ஒவ்வொரு தலைப்புகளில் வெளியிடப்பட்டு அனுப்பப்படும் இந்த வாலிபர் உலகம் பத்திரிக்கையின் மூலம், ஆயிரக்கணக்கான வாலிபர்கள் பயன்பெற்றும் கர்த்தருக்குள் பலப்பட்டும் வருகிறார்கள்.**







# MOUNT Sinai 2023

வாலிபர்கள் எழுப்புதலில் பங்கடையவும், தேசத்திற்காக ஜெபிக்கும் ஜெப வீரர்களாக மாற வேண்டுமென்றும், இயேசுவைப் போல திறப்பிலே நின்று மன்றாடி ஜெபிக்கும் வாலிபர்களாக எழும்ப வேண்டுமென்ற நோக்கத்துடனும், கடந்த 2010ஆம் ஆண்டு முதல் ''மவுண்ட் சினாய்'' என்ற வாலிபர் ஒருநாள் உபவாசக் கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. வருடந்தோறும் தீபாவளி தினத்தன்று நடைபெறும் இந்த வாலிபர் உபவாசக் கூடுகையில் கலந்து கொண்டு ஜெபிக்க, ஆயிரக்கணக்கான வாலிபர்கள் பாரத்தோடு கடந்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக 6 மற்றும் 7 இடங்களில் நடைபெற்று வந்த இந்த ஜெபம், கடந்த 2023ம் ஆண்டு நவம்பர் 11ஆம் தேதி ஒரே நேரத்தில் 36 இடங்களில் நடத்தப்பட்டதில் சுமார் 8,326 வாலிபர்கள் இணைந்து இந்திய தேசத்திற்காகவும், அழிந்து கொண்டிருக்கும் வாலிபர்களின் இரட்சிப்பிற்காகவும் திறப்பிலே நின்று ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். 36 இடங்களிலும் ஊழியர்களை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார்.





# MOUNT Sinai





# வாலிபர் எழுப்புதல் முழு இரவு ஜெபம்

எழுப்புதலைப் பரவச் செய்வோர் முகாமில் கலந்துகொண்ட வாலிபர்கள் ஒவ்வொரு தாலுக்காக்களிலும் முழு இரவும் விழித்திருந்து எழுப்புதலுக்காகவும், தேசத்தின் இரட்சிப்பிற்காகவும் ஜெபித்து வருகின்றனர்.



















# Achievers

## (தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை)



சுவிஷேத்தைத் தீவிரமாய் அறிவிக்கும் தரிசனத்தில், இயேசுவை அறியாத வாலிபர்களுக்கு, பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்குச் சென்று இயேசுவை அறிவிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு சாதனையாளராக மாறவேண்டும் என்ற நோக்கத்தோடு Achievers கூடுகை நடத்தப்படுகிறது.

2008ஆம் ஆண்டு முதல் தேர்வு எழுதும் மாணவர்களுக்காக Achievers கூடுகை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டு தன்னம்பிக்கையோடு கடந்து செல்கிறார்கள். இந்தக் கூடுகையின் மூலம் பயன்பெற்ற அநேக மாணவர்கள் இன்றைக்கு பலத் துறைகளில் ஜொலித்துக்கொண்டிருக்கிறார்கள்.





# வாலிபர் எழுப்புதல் கூடுகை






கர்த்தரை அறிந்து இரட்சிக்கப்பட்ட வாலிபர்கள், எழுப்புதலைப் பற்ற வைக்கிறவர்களாக மாற வேண்டுமென்று, மாவட்டங்கள் தோறும், தாலுக்காக்கள் தோறும் இக்கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா மற்றும் மும்பை மாநிலங்களில் நடத்தப்பட்ட இக்கூடுகைகள் மூலமாக சுமார் 13,362 வாலிபர்களை எழுப்புதலுக்காக ஆயத்தப்படுத்த தேவன் கிருபை செய்தார்.





# Revival Igniters மாதாந்திர ஐக்கிய கூடுகை!









நம்முடைய இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியங்கள் மூலம் நடத்தப்படும் வாலிபர் கூடுகைகளில் இரட்சிக்கப்படுகிற வாலிபர்கள், தொடர்ந்து கிறிஸ்துவுக்குள் வளர்ந்து பெலப்படவும், சீஷர்களாக மாறவும் மாதந்தோறும் பின்தொடர் (Follow up) கூடுகைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் வளர்ந்து பெலப்பட்ட பின்பு வேத வசனத்தில் வேரூன்றி வளரவும், கர்த்தருக்குள் சாட்சியாய் வாழவும், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் மஹாராஷ்டிரா மாநிலங்களில் மாதந்தோறும் 37 இடங்களில் Igniters மாதாந்திர கூடுகை நடைபெற்று வருகிறது. மாதந்தோறும் 2000க்கும் அதிகமான வாலிபர்கள் இந்த ஐக்கியத்தின் மூலமாக பெலப்பட்டு வருகின்றன.









































அதுமட்டுமல்லாமல் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமை சமூக வலைத்தளங்கள் மூலமாக Igniters மாதாந்திர கூடுகை நேரலை நிகழ்ச்சியின் மூலம் சுமார் 3000க்கும் அதிகமான வாலிபர்கள் பார்த்து பயனடைகிறார்கள். தேவனுக்கே மகிமை!



# Revival Igniters Camp

Spread the REVIVAL fire

2019ம் ஆண்டு எழுப்புதலில் பயன்படுத்துவதற்காக 7 விதமான யௌவன சந்ததியை (இளம் தலைமுறையை) எழுப்புவேன் என்று கர்த்தர் வாக்குக்கொடுத்தபடி தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, கிழக்கிந்தியா, வட இந்தியா மற்றும் மஹாராஷ்டிரா மாநிலங்களிலிருந்து சுமார் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாலிபர்களை நாலுமாவடி தேவனுடைய கூடாரத்திற்கு தேவனே அழைத்து வந்தார். கடந்து வந்து பயிற்சி பெற்ற ஒவ்வொருவரையும் அக்கினியாய் நிரப்பி அனுப்பினார். 2021 முதல் 2023 வரை 10க்கும் மேற்பட்ட எழுப்புதலை பற்ற வைப்போர் முகாம்கள் வாலிபர்களுக்கு மட்டும் நடைபெற்றது. இதில் எழுப்புதலுக்காக ஜெபிப்பதன் அவசியத்தையும், சுவிசேஷம் அறிவிப்பதன் முக்கியத்துவத்தையும் குறித்து சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். தீர்க்கதரிசன தலைமுறை மற்றும் யுத்த தலைமுறைகளைக் குறித்து சகோ. வின்சென்ட் செல்வகுமார் அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். கலந்து கொண்ட எல்லா வாலிபர்களையும், எழுப்புதலுக்காக ஜெபிக்கிறவர்களாகவும், தேசத்தில் எழுப்புதலைப் பரவச் செய்கிறவர்களாகவும் கர்த்தர் மாற்றி அனுப்பினார். பயிற்சி பெற்ற ஒவ்வொருவரும் அவரவர் மாநிலங்களில் சுவிசேஷம் அறிவித்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்து வருகிறார்கள்.




















# வட இந்தியாவில் எழும்பிய சேனை!

'இந்தியா முழுவதும் உள்ள வாலிபர்களை எழுப்புதலில் பயன்படுத்துவேன்' என்று தேவன் வாக்குக் கொடுத்தபடி வடஇந்தியா, கிழக்கிந்தியா மற்றும் மஹாராஷ்டிரா மாநிலங்களில் உள்ள 3305 வாலிபர்கள் எழுப்புதலின் அக்கினியை பெற்றுக்கொண்டு 40 மாவட்டங்களில் தொடர்ந்து சுவிசேஷம் அறிவித்ததில் இந்த வருடம் மட்டும் 98,725 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், 3, 10,084 மணி நேரங்கள் ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார். 445 ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு 10,048 வாலிபர்கள் இணைந்து ஜெபித்து வருகிறார்கள். தொடர்ந்து பின்தொடர் ஊழியங்கள் செய்து வரவும் தேவன் கிருபை செய்து வருகிறார்.

















# Revival IGNITERS MONTHLY FELLOWSHIP

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1st SUNDAY (7th Jan.)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark : South Police Station to Kamaraj College Rd. 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

## EVERY 2nd SATURDAY (13th Jan.)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road,
Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road,Madurai - 18
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (14th Jan.)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MUMBAI - BHANDUP (4PM – 6:30PM)**
Bright High School, Village Road,
Bhandup (W), Mumbai – 400078
9004882470

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3rd SUNDAY (21st Jan.)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via) Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road (opp Arasu
Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station RoadZion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet, opp. Latha
Steel, E C R Road. 8344433800 |
9442885315

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre,VK Road.
9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
Kamlambal Street,Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (27th Jan.)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (28th Jan.)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM – 5PM)**
World Revival Prayer Centre,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976




ON SUNDAY 28th January
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

# ஜெபக்கையேடு

ஜனவரி 2024

## இணையதள அடிமை



குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் செல்போன் உபயோகித்து வருகின்றனர். 10 வயது முதல் 13 வயது வரையுள்ள மாணவர்களில், சமூக வலைத்தளங்களை 51% பேர் பயன்படுத்தி வருகின்றனர். இளைய தலைமுறையினர் மாதத்திற்கு சுமார் 3,400 முறை சமூக வலைத்தளத்தை பயன்படுத்தி வருகின்றனர். 13% பதின்பருவத்தினர் ஆபாச வீடியோக்களைப் பார்த்தும், மற்றவர்களுக்குப் பகிர்ந்தும் வருகின்றனர். 7 முதல் 8 வயதுள்ள குழந்தைகள் அதிக நேரம் செல்போனில் கேம்ஸ் விளையாடி வருவது ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது. இணையத்தில் அதிக நேரத்தை செலவிடுவதால் பல பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு, மனஅழுத்தத்தைக் கொடுத்து உடல்நலக் கோளாறுக்கு வழிவகுக்கிறது.

### ஜெபக்குறிப்புகள்

1. செல்போனுக்கு அடிமைப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.

2. சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் 51% சிறுவர் சிறுமியர் அடிமைத்தனத்திலிருந்து வெளிவர ஜெபியுங்கள்.

3. ஆபாச வீடியோக்களைப் பார்த்து பகிர்ந்தும் வரும் இளம் வாலிபர்களை கர்த்தர் விடுவிக்கும்படி ஜெபியுங்கள்.

4. ஆன்லைன் விளையாட்டுகளுக்கு அடிமைபட்டிருக்கும் சிறுகுழந்தைகள் விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.

5. இணையதள அடிமைத்தனத்தால் மனஅழுத்தம், தூக்கமின்மை, மனசோர்வு போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும் அதிலிருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்.

## இளம் தலைமுறையினரை தாக்கும் பக்கவாதம்



பக்கவாத நோயினால் பாதிக்கப் படுபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருகிறது. கடந்த காலங்களை விட தற்போது இளம் வயதினருக்கும் பக்கவாதம் ஏற்படுவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். மூளைக்கு செல்லும் இரத்த நாளத்தில் அடைப்பு மற்றும் மூளையில் உள்ள இரத்த நாளத்தில் இரத்த கசிவு காரணமாக ஸ்ட்ரோக் ஏற்படுகிறது. ஒரே இடத்தில் நீண்ட நேரம் உட்கார்ந்து வேலை செய்வதாலும், உடல் எடை சரியாக பாரமரிக்காமல் இருப்பதாலும், புகையிலை மற்றும் மதுபானங்களை பயன்படுத்துவதாலும் பக்கவாதம் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

### ஜெபக்குறிப்புகள்

1. அதிகரித்து வரும் பக்கவாத நோய் முற்றிலும் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

2. ஸ்ட்ரோக் நோய் இளம் வயதினரை தாக்காதபடி ஜெபியுங்கள்.

3. புகை மற்றும் மதுபானத்திற்கு அடிமைபட்டிருக்கும் ஒவ்வொருவரும் விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.

4. இளைஞர்கள் சரியான உணவு முறைகளை கைக்கொண்டு பக்கவாத நோய் வராமல் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஜெபியுங்கள்.

5. இந்நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் சீக்கிரத்தில் சுகம் பெற ஜெபியுங்கள்.








## இளம் வாலிபர்களின் வாகன ஆபத்துகள்

உலக அளவில் இந்தியாவில் தான் அதிக இருசக்கர வாகனங்கள் உள்ளதாக ஒரு ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. 2022ம் ஆண்டு நிலவரப்படி இந்தியாவில் சுமார் 33 கோடி டூவீலர்கள் உள்ளதாக அந்த அறிக்கை கூறுகிறது. YouTube வீடியோ Shorts, Reels-ல் Views அதிகம் பெறுவதற்காக அநேக வாலிபர்கள் பைக் வீலிங் செய்கின்றனர். இன்றைய இளைய தலைமுறையினர் reels மோகம் கொண்டு தங்களது பைக்கில் கேமரா அல்லது ஸ்டான்டில் செல்போன்களை பொருத்தி விட்டு, நெடுஞ்சாலைகளில் எந்த வாகனங்கள் சென்றாலும், அதை முந்திச் சென்று, ஸ்பீடோ மீட்டர் மற்றும் டயரின் வேக சுழற்சியை நேரடியாக படம்பிடித்துக் காண்பித்து செல்கிறார்கள். பைக்கில் வீலிங் செய்தபடியே சென்று அதிக விபத்துகளை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவர்களும் மரணமடைகின்றனர்.



## ஜெபக்குறிப்புகள்

1. இருசக்கர வாகனத்தை பயன்படுத்துவோர் கவனமாக வாகனங்களை இயக்க ஜெபியுங்கள்.

2. சாகசங்களை செய்து கொண்டே வாகனத்தை ஓட்டும் வாலிபர்களுக்குள் விழிப்புணர்வு உண்டாக ஜெபியுங்கள்.

3. விபத்துகளை ஏற்படுத்தும் வண்ணமாக வாகதை ஓட்டுவோரின் உரிமங்களை அரசு தடை செய்ய ஜெபியுங்கள்.

4. பைக்கில் வீலிங் செய்து விபத்துகளை ஏற்படுத்தி மரணங்கள் சம்பவிக்காதபடி, விழிப்புணர்வுடன் செயல்பட ஜெபியுங்கள்.

5. Viewsக்காக, Likes-க்காக ஏற்படவிருக்கும் ஆபத்துகளை புரிந்து கொள்ளாமல் செயல்படும் வாலிபர்களின் சிந்தையில் மாற்றம் உண்டாக ஜெபியுங்கள்.



## இயற்கையினால் வரும் அழிவுகள்

பனிச்சரிவு, குளிர், புயல், சூறாவளிக் காற்று, நிலநடுக்கம், வெள்ளம், வெப்பம், நிலச்சரிவு, மின்னல், கனமழை, காட்டுத் தீ எனப் பல்வேறு விதமான இயற்கைச் சீற்றங்களால் ஒவ்வொரு வருடமும் மனிதன் பாதிப்புக்குள்ளாகிறார்கள். குறிப்பாக இந்தியாவில் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தவும், இயற்கையைப் பாதுகாக்கவும் பல்வேறு விதமான திட்டங்கள் போடப்பட்டு, நடைமுறையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தியாவில் ஏற்படும் ஒட்டுமொத்த இறப்புகளில் 1.7 சதவிகித இறப்புகள், இயற்கைச் சீற்றங்களினால் மட்டுமே ஏற்படுகின்றன என்று NCRB அறிக்கை சொல்கிறது. உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் 45,000 பேர் இயற்கை பேரழிவுகளால் இறக்கின்றனர்.



## ஜெபக்குறிப்புகள்

1) இயற்கை அழிவுகள் வராமல் தடுக்கப்படவும், ஜனங்கள் பாதுகாக்கப்படவும் ஜெபியுங்கள்.

2) இயற்கையை பாதுகாக்க அரசாங்கம் எடுக்கும் திட்டங்களை தீவிரமாய் எடுக்க ஜெபியுங்கள்.

3) இயற்கை அழிவுகளினால் ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான மக்கள் மரணமடைவது தடுத்து நிறுத்தப்பட ஜெபியுங்கள்.

4) இதைக்குறித்த விழிப்புணர்வு ஒவ்வொருவருக்கும் உண்டாகவும், நாம் வாழும் தேசம் பாதுகாக்கப்படவும் உயிரிழப்புகள் தடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

5) இந்தப் புதிய ஆண்டில் எந்தவிதமான அழிவுகளும் வராதபடிக்கு தேவன் பாதுகாக்க ஜெபியுங்கள்.



# ஆண்டு ஆறிக்கை 2023

இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திற்கு தேவன் கொடுத்த "10 ஆண்டுகளுக்குள் 50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 5 கோடி ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வேண்டும்" என்ற உன்னத தரிசனத்தின்படி, தேவன் தமது திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். அதில் வாலிபர் ஊழியத்தின் மூலம் 10 கோடி வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து 1 கோடி வாலிபர்களை ஆதாயப்படுத்த வேண்டுமென்று கொடுக்கப்பட்ட பெரிய தரிசனத்தை தீவிரமாய் செய்ய தேவன் கிருபை செய்கின்றார். தமிழ்நாடு முழுவதும் 5261 வாலிபர்களை சேனையாக உருவாக்கி, தேசத்தில் சுவிசேஷ விதைகளை விதைக்கிறவர்களாகவும், எழுப்புதல் அக்கினியைப் பரவ செய்கிறவர்களாகவும் உருவாக்க தேவன் பெலன் தந்தார்.

மேலும் கர்நாடகா, கேரளா, ஆந்திரா மற்றும் தெலுங்கானா போன்ற தென் மாநிலங்களிலும், வடஇந்தியா, கிழக்கிந்தியா மாநிலங்களிலும் உள்ள வாலிபர்களை அழைத்து எழுப்புதல் தரிசனத்தை தந்து இந்தியா முழுவதும் எழுப்புதல் அக்கினியை பரவச் செய்கிறவர்களாக அவர்களை உருவாக்கி அனுப்ப தேவன் கிருபை செய்தார்.

இந்த Revival Igniters மூலமாக தேவன் பலத்த காரியங்களை தேசத்தில் செய்து வருகிறார். கடந்த மூன்று ஆண்டுகளில் (2021-2023) 11,35,964 மணி நேரம் தேசத்திற்காக ஜெபிக்கவும், 65,45,179 பேருக்கு சுவிசேஷத்தை நேரடியாகவும், ஊடகம் வாயிலாகவும் அறிவிக்கவும் தேவன் கிருபை செய்துள்ளார்.

தொடர்ந்து இந்த எழுப்புதல் அக்கினியை தங்கள் மாநிலங்களிலும், மாவட்டங்களிலும் இன்னும் தீவிரமாய் பரவச்செய்ய தேவன் இவர்கள் அனைவரையும் ஏவி எழுப்ப உங்கள் ஜெபங்களில் தாங்குங்கள்.

2030க்குள் 10 கோடி வாலிபர்கள் சந்திக்கப்படவும் 1 கோடி வாலிபர்கள் இரட்சிப்புக்குள் நடத்தப்படவும் ஜெபிப்போம்! செயல்படுவோம்!





இயேசு விடுவிக்கிறார்

# வாலிபர் உலகம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சி



இயேசுவை அறியாத வாலிபர்களுக்கு, தொலைக்காட்சி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாக ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை காலை 6:30 மணிக்கு வாலிபர்களுக்கு ஏற்ற விதத்தில் குறும்படங்கள், உண்மையை தெரிஞ்சுக்கோ என்ற நிகழ்ச்சியில் (தனிமை, சோர்வு, லவ் பண்ணுவது பாவமா, இச்சையடக்கம்) போன்ற பல ஆலோசனை வழங்குவதோடு, சாதனையாளர்களின் சாட்சிகள், ஆராதனையோடு கூடிய தேவ வார்த்தைகள் மட்டுமல்லாமல் இன்னும் பல புதுப் புது நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகின்றன. வாலிபர்கள் எளிதாக புரிந்து கொள்ள குறும் வீடியோக்கள் (shorts) மூலமாகவும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 2023ம் ஆண்டு 7,09,171 பேர் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர்.








**சத்தியம் TVயில்**
**சனிக்கிழமை தோறும்**
**6:30 மணி**

Sathiyam

YouTube

Comforter DIGITAL CHANNEL

**காலை 7 மணிக்கு**
**YouTube மற்றும்**
**Comforter TVயிலும்**
**காணலாம்.**

**வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!**

**9750955547**

# செய்திகள் !

## காற்று மாசு காரணமாக இந்தியாவில் ஆண்டுதோறும் 21 லட்சம் உயிரிழப்புகள்!



காற்று மாசுபாட்டால் இந்தியாவில் ஆண்டுக்கு 21 லட்சம் பேர் இறக்கின்றனர் என்று ஜெர்மனியை சேர்ந்த விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இது குறித்து ஜெர்மனியில் உள்ள மேக்ஸ் பிளாங்க் வேதியல் ஆராய்ச்சி மையத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது: புதை படிவ எரிபொருட்கள் தொடர்பான காற்று மாசுபாட்டால் ஏற்படும் அனைத்து காரணங்கள் குறித்து ஆராயப்பட்டது. கடந்த 2019ல் உலகளவில் ஏற்பட்ட 80 லட்சம் இறப்புகள் சுற்றுப்புற காற்றில் உள்ள நுண்ணிய துகள்கள் (பிஎம்2.5) மற்றும் ஒசோன்(ஓ3) ஆகியவற்றால் ஏற்பட்டது தெரியவந்துள்ளன. இதில் 61 சதவீதம் (50 லட்சம்) புதை படிவ எரிபொருளுடன் சம்மந்தப்பட்டது. அனைத்து மனிதர்களால் ஏற்படுத்தப்படும் உமிழ்களை கட்டுப்படுத்துவதன் மூலம் 82 சதவீத காற்று மாசுபாடு இறப்புகளை தடுக்கலாம். காற்று மாசுபாட்டால் இறப்புகள் தெற்கு மற்றும் கிழக்கு ஆசியா நாடுகளில் தான் அதிகமாக உள்ளன. குறிப்பாக சீனாவில் ஆண்டுக்கு 24 லட்சம் உயிரிழப்புகள் ஏற்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக இந்தியாவில் ஆண்டுக்கு 21 லட்சம் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**- தினகரன், 1 டிசம்பர் 2023.**

## இளம் வயதினர் மற்றும் இளைஞர்கள் மத்தியில் எடை மற்றும் உடல் பருமன் அதிகரிப்பு! மருத்துவர்கள் எச்சரிக்கை!

இளம் வயதினர் மற்றும் இளைஞர்கள் மத்தியில் அதிக எடை மற்றும் உடல் பருமன் அதிகரிப்பு. எனவே தினமும் 45 நிமிடங்களாவது உடற்பயிற்சிகளில் ஈடுபட வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.

உலக நீரிழிவு தினத்தையொட்டி எம்.வி. நீரிழிவு மற்றும் பேராசிரியர் எம்.விஸ்வநாதன் நீரிழிவு ஆராய்ச்சி மையம் இணைந்து "சென்னை ஸ்லிம் அண்ட் ஃபிட் 2.0" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த முன்முயற்சியானது நீரிழிவை தடுப்பதில் ஒத்துப்போகிறது. இந்த திட்டம் தொடர்பாக சென்னையில் உள்ள அனைத்து மண்டலங்களிலும் உள்ள பள்ளிகளில் விழிப்புணர்வு கையேட்டை வழங்கப்பட்டுள்ளது. சென்னை ஸ்லிம் அண்ட் ஃபிட் திட்டம் மூலம் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரிடையே அதிக எடை மற்றும் உடல் பருமனின் பரவலை கண்டறிய பள்ளிகளில் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இது குறித்து எம்.வி. நீரிழிவு ஆராய்ச்சி மைய தலைவர் டாக்டர் விஜய் விஸ்வநாதன் கூறியதாவது:

மக்கள் இளமையாக இருக்கும்போது வாழ்க்கையை சுறுசுறுப்பாக வைத்திருக்க வேண்டும். குறைந்தது 45 நிமிடங்களாவது நீச்சல், ஜாக்கிங் அல்லது நடைபயிற்சி போன்ற உடற்பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். தியான பயிற்சி செய்வது மனஅழுத்தத்தை குறைக்கும். நீரிழிவு ஆபத்தில் உள்ள மக்கள் அதற்கேற்ற உணவு சாப்பிட பழகுவது நல்லது. சரிவிகித உணவு, முறையான உடற்பயிற்சி, 3 மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வக பரிசோதனை மற்றும் தகுதி வாய்ந்த மருத்துவரின் ஆலோசனைகள் மூலம் நீரிழிவு நோயை எந்த நிலையிலும் கட்டுப்படுத்தலாம்.

கோவிட் தொற்றுக்கு பிந்தைய காலத்தில் குழந்தைகள் மட்டுமின்றி இளம் வயதினர் மற்றும் இளைஞர்கள் மத்தியில் அதிக எடை மற்றும் உடல் பருமன் அதிகரித்து வருகிறது. உணவுப் பழக்கவழக்கங்களில் மாற்றங்கள், உடற்கல்வி வகுப்புகளில் கட்டாயமாக பங்கேற்றல், பள்ளி கேன்டீன்களில் ஆரோக்கியமான சிற்றுண்டிகளை ஊக்குவித்தல், டிவி பார்ப்பது மற்றும் மொபைல் கேமிங் போன்ற செயல்களை குறைத்தல் போன்ற செயல்களில் ஈடுபட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**- தினகரன், 16 நவம்பர் 2023.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



# Achievers 2024

(தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கான சிறப்பு பிரார்த்தனை)

## திருநெல்வேலியில்...

நாள் ஜனவரி 21, (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மதியம் 2 மணி முதல் 5 மணி வரை

இடம்: சாரா டக்கர் மேல்நிலைப் பள்ளி
பாளையம்கோட்டை

ஆலோசனையும் ஜெபமும் : சகோ. அவினாஷ்

தொடர்புக்கு 9750955548

## சங்கரன்கோவிலில்...

நாள் ஜனவரி 19, (வெள்ளிக்கிழமை)
நேரம்: மாலை 4:30 மணி முதல் 7:30 மணி வரை

இடம்: St. Paul's மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி,
சங்கரன்கோவில் to கழுகுமலை ரோடு
செவல் குளம், சங்கரன்கோவில்.

ஆலோசனையும் ஜெபமும் : சகோ.சதீஷ் குமார்

தொடர்புக்கு 94882 94396, 9677858766

## தஞ்சாவூரில்...

நாள் பிப்ரவரி 4, (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மதியம் 2 மணி முதல் 5 மணி வரை

இடம்: Parish Hall,
பிளேக் மேல்நிலைப் பள்ளி எதிரில்,
தஞ்சாவூர்

ஆலோசனையும் ஜெபமும் : சகோ. அவினாஷ்

தொடர்புக்கு: 9489775075, 9444381971, 9942449888

## காங்கேயத்தில்...

நாள்: ஜனவரி 21, (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 4 மணி முதல் 7 மணி வரை

இடம்: Y N C (கொரியா) சர்ச்,
காந்திபுரம், தாராபுரம் ரோடு
(ஹை ஸ்கூல் அருகில்) காங்கேயம்.

ஆலோசனையும் ஜெபமும் : சகோ.சதீஷ் குமார்

தொடர்புக்கு: 82482 83373 I 94428 85315

## ஜெபமலையில்...

நாள் பிப்ரவரி 18, (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை

இடம்: ஜெபமலை, கீழ மாதாபுரம்
தென்காசி மாவட்டம்

ஆலோசனையும் ஜெபமும் : சகோ. அவினாஷ்

தொடர்புக்கு 8300131000 I 9750955548

## கோவில்பட்டியில்...

நாள் பிப்ரவரி 11 (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 3 மணி முதல் 5:30 மணி வரை

இடம்: St. Paul's மெட்ரிகுலேஷன் பள்ளி

ஆலோசனையும் ஜெபமும்:
பாஸ்டர் சரவணன் (சென்னை)

தொடர்புக்கு: 9677858766 / 9787322334









Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 12 -2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்

**நாலுமாவடியில்...**



# Achievers 2024

(தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கான சிறப்பு பிரார்த்தனை )

ஆலோசனையும் ஜெபமும் :

## சகோ. மோகன் சி. லாசரஸ்





நாள் : **ஜனவரி 26**, (வெள்ளிக்கிழமை)

நேரம் : மதியம் 1 மணி முதல் மாலை 5 மணி வரை

**இடம் : தேவனுடைய கூடாரம், நாலுமாவடி**



தோல்வி பயமா? தேர்வைக் குறித்த கலக்கமா?
படித்தது மறந்து போகிறதா? சந்தேகமா?
இயேசு உங்களுக்கு விடுதலை தருவார்!



பள்ளிக் கல்லூரியில் படிக்கும் மாணவ மாணவியர் கலந்து கொள்ளுங்கள்!
பெற்றோரே உங்கள் பிள்ளைகளை அனுப்பி வையுங்கள்.

தொடர்புக்கு: 9442885315 | 9750955548 | 04639-353333